# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 80 — 1973 ඔක්තෝබර් 05 වැනි සිකුරාදා — 1973.10.05

80 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 05 ம் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II ஆ)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 1063 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | — | ஏலவிற்பனைகள் .. .. .. | — |
| ஆலவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | — | நானாவித அறிவித்தல்கள் .. .. | — |


*கவனிக்க.*—அரசாங்க சேவை பரஸ்பர சகாயச் சங்கம் (திருத்தம்) சட்டமூலம் 1973 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 28 ஆந் திகதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II ற்கு குறைநிரப்பியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### திரிகோணமலையில் இலங்கைக் கடற்படையின் டொக்யாட் சினி மாவில் படங்கள் திரையிடுவதற்காகிய கேள்வி

திரிகோணமலையில் இலங்கைக் கடற்படையின் டொக்யாட் சினி மாவில் படங்கள் திரையிடுவதற்காகிய கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. மேற்கூறிய சேவைக்குரிய கேள்விப்பத்திரங்கள் இலங்கைக் கடற்படைத் தளபதியினால், கொழும்பு 1, த. பெ. இல. 593, கடற்படைத் தலைமைக் காரியாலயத்தில் கீழ்க்காணும் விதியில் வழங்கப்படும்.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் கடைசித் திகதியும் நேரமும்—1973, ஒக்தோபர் 18 ம் திகதி நடுப்பகல் 12.00 மணிவரை.

கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசித் திகதியும் நேரமும்—1973, ஒக்தோபர் 19 ம் திகதி முற்பகல் 10.00 மணி வரை.

கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் திகதியும் நேரமும்—1973, ஒக்தோபர் 19 ம் திகதி முற்பகல் 11.00 மணி.

3. படங்களைத் திரையிடும் பொறுப்பெடுப்பதற்கான பொருளாதார வசதியும், நிலையும் உடையவரென்று எழுத்து மூலமாக கேள்வியாளர் விபரம் சமர்ப்பித்ததன் பின்பு கேள்விப் பத்திரங்கள் அளிக்கப்படும்.

4. கேள்விப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன் திரும்பப் பெறக்கூடிய பணமாக ரூபா 75 கடற்படைத் தலைமைக் காரியாலயத்தில் செலுத்த வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. காசுக்கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்படும். காசுக்கட்டளைகள் கடற்படைத் தளபதியின் பெயரில் எழுதப்படல் வேண்டும்.

5. கேள்வியாளர்கள் தமது முழுப்பெயரையும், விலாசத்தையும் கேள்விப்பத்திரத்திற்கான விண்ணப்பத்தில் கொடுக்கவேண்டும்.

டி. பி. குணசேகர,
கொமதோர்,
கடற்படைத் தளபதி.

10-18—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

### முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I: தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும் குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் வ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

### சிறு கைத்தொழிற்றிணைக்களம்

கொழும்பு 1, ஹேமாஸ் கட்டிடத்திலுள்ள சிறு கைத்தொழிற்றிணைக்களத்தின் கேள்விச் சபைத் தலைவர் 1973.10.23 ந் திகதி காலை 10 மணி வரை திஸ்ஸமகாராமை, கட்டானை ஆகிய இடங்களிலுள்ள மின்தறி வேலைத்தலங்களிற் பொறித் தொகுதிகட்கு மின்சாரக் கம்பியிடுவதற்கான கேள்விகளை ஏற்றுக்கொள்வார்.

2. விரும்பும் கேள்வியாளர்கள் கேள்விப் படிவங்களைப் பெறுவதற்கு 1973.10.23 ந் திகதி நண்பகல் 12 மணிக்கோ அதன் முன்போ இத்திணைக்கள அலுவலகத்திற் கேள்விக் கட்டுப்பணமாக ஒவ்வொன்றிற்கும் தனியாக ரூபா 100 ஐச் செலுத்திப் பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.

சோமபால குணதீர,
சிறு கைத்தொழிற் பணிப்பாளர்.

தொடர்பிலக்கம் : 3/1—(1/66)
சிறு கைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1973.09.24.

10-46—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

---

### புத்தள மாவட்டத்தில் கட்டிட வேலைகளுக்கான கேள்விப்பத்திரம்

புத்தள மாவட்டத்தில், கீழ்க் குறிப்பிடப்படும் கட்டிட வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள், கொழும்பு, த. பெ. இல. 500, காணிக் கொமிஷனர் இலாகா கேள்விப்பத்திர மண்டலத்தில் தலைமையாளரால் 26.10.1973 ம் திகதி பி. ப. 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

| வேலை விபரம் | காரியாதிகாரி பிரிவு | பதிவு செய்திருக்க வேண்டிய தொகை ரூபா |
|---|---|---|
| (1) பத்துலு ஓய் தாரவில்லுவ தென்னை தவானை தெரு | ஆரச்சிக்கட்டுவ | 50,000 |
| (2) வில்பொத்த வழி திருத்துதல் | ஆரச்சிக்கட்டுவ | 25,000 |

2. அரசாங்க அலுவலகங்களில், மேலே கூறப்பட்டிருக்கும் தொகை ரூபாவுக்கும் அல்லது அதற்கு மேலும் பதிவுசெய்யப்பட்ட கொந்தராத்துக்காரர்களும், கூட்டுறவுச் சங்கங்களும், தொழிற் சங்கங்களும், கிராம முன்னேற்றச் சங்கங்களும், கேள்விப்பத்திரங்களுக்கான வெற்றுப் பத்திரங்கள் 1973.10.23 ம் திகதி ந. ப. 12.00 மணி வரை புத்தளம் கச்சேரியில் விநியோகிக்கப்படும்.

3. கொந்தராத்துக்காரர்கள், மேற்கூறிய வேலைகளுக்கு, கேள்விப் பத்திர வைப்புப்பணமாக ரூபா 50 வீதம், புத்தளம் கச்சேரியிலோ வேறெந்தக் கச்சேரியிலோ அல்லது பொதுத் திறைசேரியிலோ பணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன், மேலே கூறப்பட்ட ரூபா அல்லது அதற்கு மேலான தொகைக்குப் பதிவுசெய்யப்பட்ட கொந்தராத்துக்காரர் என அத்தாட்சிப்படுத்தும் பத்திரங்களை கேள்விப்பத்திரங்களுக்கான வெற்றுப்பத்திரங்கள் கொடுபடமுன், புத்தள அரசாங்க அதிபரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விப்பத்திர வைப்புப்பணம் கட்டத் தேவையில்லை. எப்படியென்றாலும் மேலே கூறப்பட்ட ரூபாவுக்கு பதிவுசெய்யப்பட்ட பத்திரங்களைச் சமர்ப்பித்த பின்னரே கேள்விப் பத்திரங்கள் இவர்களுக்கு வழங்கப்படும். காசோலைகள், தபாற்கட்டளைகள், காசுக்கட்டளைகள் ஆகியன ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

4. புத்தளம் அரசாங்க அதிபரிடம் இருந்து பெறும் பத்திரங்கள் இணைப்பிரதியில் நிரப்பப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்களில் கையொப்பம் இட்டு திகதியிட்டு முத்திரையிடப்பட்ட கவரில் போட்டு, அக்கவரின் இடதுபக்க மேல் மூலையில் "(கேள்விப்பத்திரம் அனுப்பப்படும் வேலையின் பெயர்) கட்டுவேலைக்கான கேள்விப்பத்திரங்கள்" எனக் குறிப்பிட வேண்டும். கேள்விப்பத்திரங்கள் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படாவிட்டால் கேள்விப்பத்திரங்களை தாமாகவே கொழும்பு திறைசேரி, மூன்றாவது தட்டிலுள்ள, 320 ம் இலக்க அறையில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியில் இடவேண்டும்.

5. கேள்விப்பத்திரங்கள் 1973.10.26 ம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு மேலே குறிக்கப்பட்ட இல. 320 ம் அறையில் திறக்கப்படும் பொழுது கேள்விக்காரர்களோ அல்லது அவர்களுடைய பிரதிநிதிகளோ சமூகமாயிருக்க அனுமதிக்கப்படுவார்கள்.

6. காரணம் காட்டாமல் கேள்விப்பத்திரங்களில், ஏதாவதொன்றையோ அதன் பகுதியொன்றையோ ஏற்றுக்கொள்ளவும், கேள்விப்பத்திரங்களில் ஏதாவது ஒன்றை அல்லது முழுவதையும் நிராகரிக்க கேள்விப் பத்திரச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

7. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் தமது கேள்விப் பத்திரம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது என எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டவுடன், கேள்விக்குரிய தொகை ரூபாவின் நூற்றுக்கு ஐந்து வீதத் தொகையை பாதுகாப்புப் பணமாகக் கட்ட வேண்டும். அத்துடன் ஏழு நாட்களுள் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுதல் வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திரகாரருக்கு, அவர் கொடுத்த விலாசத்திற்கு, பதிவுத் தபால் மூலம், அல்லது நேரிலோ, தெரிந்தெடுக்கப்பட்டதை கடிதமூலம் அறிவித்தால், கேள்விப்பத்திரகாரர் ஏற்றுக்கொண்டார் என்று கொள்ளப்படும். கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டது பற்றி கடிதம் பெற்ற ஒருவர், ஒப்பந்தம் எழுதத் தவறுவாராயின் அவர் கட்டிய கேள்விப்பத்திர வைப்புப்பணம் அரசாங்கத்துக்குச் சொந்தமாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திரகாரர், கேள்விப் பத்திரத் தொகையின் நூற்றில் ஐந்து பங்கைக் கட்டியவுடன், தேர்ந்தெடுக்கப்படாதோரின் கேள்விப்பத்திர வைப்புப்பணம் திரும்பக் கொடுக்கப்படும்.

8. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திரகாரர், நியமித்த வேலையை முடிப்பதற்கு இலங்கையரையே வேலைக்கு அமர்த்தல் வேண்டும். அதுவும் வேலை ஏற்றுக்கொள்ளப்பட்ட பகுதியில் வசிப்பவரையே தெரிந்தெடுத்தல் வேண்டும். கூலியாட்களுக்கு சம்பளம் வழங்குவதற்கென இப்பொழுது பாவிப்பில் உள்ள சட்டங்கள், பின்னும் பாவிப்புக்கு வரவிருக்கும் சட்டங்களுக்கு இணங்கவே, இவ்வேலையை முடிப்பதற்கு தரமான வேதனம் வழங்க வேண்டும்.

9. வேறு விபரங்கள், புத்தள அரசாங்க அதிபரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ப. சு. விஜயவீர,
அரசாங்க அதிபர்,
புத்தள மாவட்டம்.

புத்தளக் கச்சேரி,
1973 ம் ஆண்டு செப்ரெம்பர் மீ 20 ந உ.

10–11/1—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

---

### புத்தள மாவட்டத்தில் கட்டிட வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள்

புத்தள மாவட்டத்தில் கீழ்க் குறிக்கப்படும் கட்டிட வேலைக்கான கேள்விப் பத்திரங்கள், புத்தளம் கச்சேரி கேள்விப்பத்திர சபைத் தலைவரால் 26.10.1973 ம் திகதி பி. ப. 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

| வேலையின் விபரம் | காரியாதிகாரி பிரிவு | பதிவு செய்திருக்க வேண்டிய தொகை ரூபா |
|---|---|---|
| (1) வனாத்தவில்லு கு. அ'ன் வீட்டைத் திருத்தல் | புத்தளம் | 1,500 |
| (2) ஆனமடு கு. அ'ன் வீட்டைத்திருத்தல் | கு. வ. ப. | 1,500 |

2. அரசாங்க அலுவலகங்களில் மேலே கூறப்பட்டிருக்கும் தொகை ரூபாவுக்கும் அல்லது அதற்கு மேலும் பதிவுசெய்யப்பட்ட கொந்தராத்துக்காரர்களுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும், தொழிற் சங்கங்களுக்கும், கிராம முன்னேற்றச் சங்கங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கான வெற்றுப் பத்திரங்கள் 23.10.1973 ந் திகதி ந. ப. 12.00 மணிவரை புத்தளம் கச்சேரியில் விநியோகிக்கப்படும்.

3. கொந்தராத்துக்காரர்கள், மேற்கூறிய வேலைகளுக்குக் கேள்விப் பத்திர வைப்புப்பணமாக ரூபா 25 வீதம், புத்தளம் கச்சேரியிலோ வேறெந்தக் கச்சேரியிலோ, அல்லது பொதுத் திறைசேரியிலோ பணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன், மேலே கூறப்பட்ட ரூபா அல்லது அதற்கு மேலான தொகைக்குப் பதிவுசெய்யப்பட்ட கொந்தராத்துக்காரர் என அத்தாட்சிப்படுத்தும் பத்திரங்களை, கேள்விப் பத்திரங்களுக்கான வெற்றுப்பத்திரங்கள் கொடுபடமுன், புத்தள அரசாங்க அதிபரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விப்பத்திர வைப்புப்பணம் கட்டத் தேவையில்லை. எப்படியென்றுலும் மேலே கூறப்பட்ட ரூபாவுக்குப் பதிவு செய்யப்பட்ட பத்திரங்களைச் சமர்ப்பித்த பின்னரே கேள்விப் பத்திரங்கள் இவர்களுக்கு வழங்கப்படும். காசோலைகள் தபாற்கட்டளைகள், காசுக்கட்டளைகள் ஆகியன் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

4. புத்தளம் அரசாங்க அதிபரிடம் இருந்து பெறும் பத்திரங்கள் இணைப்பிரதியில் நிரப்பப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்களில் கையொப்பமிட்டு, திகதியிட்டு, முத்திரையிடப்பட்ட கவரில் போட்டு, அக்கவரின் இடது பக்க மேல் மூலையில் "(கேள்விப்பத்திரம் அனுப்பப் படும் வேலையின் பெயர்) கட்டுவேலைக்கான கேள்விப்பத்திரங்கள்" எனக் குறிப்பிடவேண்டும். கேள்விப் பத்திரங்கள் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படாவிட்டால், கேள்விப்பத்திரங்களைத் தாமாகவே புத் தளக் கச்சேரியில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியில் இடவேண்டும்.

5. கேள்விப்பத்திரங்கள் 26.10.1973 ந் திகதி மாலை 2.30 மணிக்கு புத்தளக் கச்சேரியில் வைத்துத் திறக்கப்படும். அப்பொழுது கேள்விக் காரர்களோ அல்லது அவர்களுடைய பிரதிநிதிகளோ சமூகமாயிருக்க அனுமதிக்கப்படுவார்கள்.

6. காரணம் காட்டாமல் கேள்விப்பத்திரங்களில், ஏதாவதொன் றையோ அதன் பகுதியொன்றையோ ஏற்றுக்கொள்ளவும், கேள்விப் பத்திரங்களில் ஏதாவதொன்று அல்லது முழுவதையும் நிராகரிக்க கேள்விப்பத்திரச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

7. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர், தமது கேள்விப்பத்திரம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது என எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டவுடன் கேள்விக்குரிய தொகை ரூபாவின் நூற்றுக்கு ஐந்து வீதத் தொகையை பாதுகாப்புப் பணமாகக் கட்ட வேண்டும். அத்துடன் ஏழு நாட்களுள் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுதல் வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரருக்கு அவர் கொடுத்த விலாசத் திற்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரிலோ, தெரிந்தெடுக்கப் பட்டதை கடித மூலம் அறிவித்தால், கேள்விப்பத்திரகாரர் ஏற்றுக் கொண்டார் என்று கொள்ளப்படும். கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப் பட்டது பற்றி கடிதம் பெற்ற ஒருவர், ஒப்பந்தம் எழுதத் தவறுவா ராயின் அவர் கட்டிய கேள்விப்பத்திர வைப்புப்பணம் அரசாங்கத்துக்குச் சொந்தமாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திரகாரர், கேள்விப் பத்திரத் தொகையின் நூற்றில் ஐந்து பங்கைக் கட்டியவுடன், தேர்ந் தெடுக்கப்படாதோரின் கேள்விப்பத்திர வைப்புப்பணம் திருப்பிக் கொடுக் கப்படும்.

8. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திரகாரர், நியமித்த வேலையை முடிப்பதற்கு இலங்கையரையே வேலைக்கமர்த்தல் வேண்டும். அதுவும் வேலை ஏற்றுக்கொள்ளப்பட்ட பகுதியில் சீவிப்பவரையே தேர்ந்தெடுத் தல் வேண்டும். கூலியாட்களுக்குச் சம்பளம் வழங்குவதற்கென இப் பொழுது பாவிப்பில் உள்ள சட்டங்கள், பின்னும் பாவிப்பிற்கு வாவிருக் கும் சட்டங்களுக்கு இணங்கவே, இவ்வேலையை முடிப்பதற்குத் தரமான வேதனம் வழங்க வேண்டும்.

9. வேறு விபரங்கள் புத்தள அரசாங்க அதிபரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ப. சு. விஜயவீர,
அரசாங்க அதிபர்,
புத்தள மாவட்டம்.

புத்தளக் கச்சேரி,
1973 ம் ஆண்டு செப்டெம்பர் மீ 20 ந் உ.

10–11/2—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

---

**சௌக்கியத் திணைக்களம்—அனுராதபுரப் பிரிவு**

பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்கல்

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவையும்.**—1974 ம் ஆண்டு சனவரி மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1974 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ந் திகதி (இரு நாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் நிலையங்களுக்குப் பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்குவதற்குரியதும் முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து சௌக்கிய சேவை அத்தியட்சகர், அனுராதபுரம் ஏற்றுக்கொள்வார்.

2. **கேள்விக் கட்டுப்பணம்.**—கீழ்க்காணும் அட்டவணையின் இரண்டாம் பந்தியில் குறிக்கப்படும் வைப்புப் பணத்தை எந்த ஒரு கச்சேரியில் எனது பெயரில் கட்டிப் பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ளவும்.

அனுமதிபெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்கள் அல்லாவிட்டால் பதிவுசெய்த கூட்டுறவுச் சங்கங்கள், பலநோக்குச் சங்கங்கள் கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பங்கள் செய்யலாம். மேலே குறிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விக் கட்டுப்பணம் கட்டவேண்டிய அவசியமில்லை. இச்சங்கங்கள் தங்கள் பதிவு இலக்கத்தை கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்போது எழுதி அனுப்ப வேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பம் செய்யுமுன் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் சௌக்கிய சேவை அத்தியட்சகர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும்.

மேலே இரண்டாம் பந்தியில் கூறப்பட்டுள்ள எந்த ஒரு காரியாலயத்திலும் இதற்கான பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகுதி விபரங்களையோ அல்லது நிதிநிலை நிரூபணத்தையோ அளிக்கத் தவறினுல் கேள்விக் கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

4. **தொகைகள்.**—கீழ்க்காணும் அட்டவணையில் 5 ம் பந்தியில் உத்தேச விநியோகத் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பவேண்டிய முறை**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சௌக்கிய சேவை அத்தியட்சர், அனுராதபுரம் என்று முகவரியிடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பப்பட வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடது பக்கத்து மேல் மூலையில் சேவையின் தன்மையும் இடது பக்கத்து கீழ் மூலையில் அனுப்புபவரின் பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளைப் பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம். அல்லது அவைகளை இந்தக் காரியாலயத்தில் இருக்கும் கேள்விப் பெட்டிக்குள் போடலாம். அல்லது ஒப்பந்த விநியோகக் கணக்காளரிடம் கொடுத்தால், அவர் அக்கேள்வியை ஒப்புக்கொண்ட தற்கு ஒரு பற்றுச்சீட்டு தருவார்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ் அட்டவணையின் நாலாவது பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை பத்து மணிக்கு இந்தக் காரியாலயத்தில் கேள்விகள் மூடப்பெற்று உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமூகமாயிருக்கலாம். சமூகமாயிருக்கும் கேள்விக்காரர் களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும், தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுனித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக் காரரும் என்னுடனே அல்லது எனது அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனே ஒழுங்குகள் செய்த பின்னர் தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுனித்தாய அனுமதிக்கப்படுவார்.

8. **கேள்விகள் பற்றித் தீர்மானித்தல்.**—கேள்விப்படிவங்களில் உள்ளப் சாப்பாட்டு "பீ" அட்டவணையிற் கொடுக்கப்பட்டிருக்கும் விடயங் களுக்குக் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி உண்டாகும் சேவையின் முழுச் செலவுத் தொகையை அடிப்படையாகக் கொண்டே பெறப்பட்ட கேள்விகள் தீர்மானிக்கப்படும்.

இருந்தும் கேள்விக்காரர்கள் கேள்விப்பத்திரத்தின் அட்டவணை "சீ" யின் உள்ள மேலதிகமான உணவுப் பொருட்களுக்கும் வீதங்களை குறிப்பிட வேண்டும். ஆனல் கேள்வியில் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி அல்லது சந்தை வீதப்படி இவைகளில் எது குறைந்ததோ அந்த வீதப் படியும் விலை கட்டுப்படுத்தப்பட்டிருந்தால் அந்த விலைப்படியே பணம் கொடுக்கப்படும்.

9. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்ட வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பதுபோல ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரைக்கும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி எச்சூழ்நிலையையும் முன்னிட்டு குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் வீதங்களை மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

10. **பிணை வைப்புப்பணங்கள்.**—இங்கு தரப்பட்டிருக்கும் அட்டவணையின் 3 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் தேவையான பிணைப் பணத்தைக் கட்டிய பின்பே தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும்.

11. **களஞ்சியத்திடுகை இடவசதி.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்களுக்கு தாபனத்திலோ அடுத்துள்ள இடங்களிலோ களஞ்சிய அறை போன்ற வசதிகள் கொடுக்கப்படமாட்டா.

12. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப்படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளை படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்கவேண்டும். கேள்விப்படிவத்திலுள்ள உடன்படிக்கை நிபந்தனைகளையும் கேள்விக்காரர்கள் கவனிக்க வேண்டும்.

13. (i) கேள்விக்காரர்களால் குறிப்பிடப்படும் வீதங்கள் ஒரு முழு உணவுச் சாப்பாட்டிற்கு $3\frac{1}{2}$ அவுன்ஸ் அரிசி அளவு வீதம் இரு சாப்பாடுகள் ஒரு நோயாளிக்கு விநியோகிக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

(ii) உணவுக் கட்டுப்பாட்டதிகாரியினால் விலை குறைக்கப்படாத வீதத்தில் அரிசி விநியோகிக்கப்படும். கேள்விக்காரர்கள் அந்த அரிசிக்கு உணவுக் கட்டுப்பாட்டதிகாரியினால் அன்றன்று விதிக்கப்படும் விலைக்கு பணம் கொடுக்க வேண்டும். நன்கொடையாகவோ இனமாகவோ அளிக்கப்பட்ட அரிசி ஒப்பந்தக்காரர்களுக்குச் சமையலுக்கு விநியோகிக்கப்பட்டால் விலை குறைக்கப்படாத வீதத்தில் அந்த அரிசியின் அளவு ஒப்பந்தக்காரரின் உணவுப் பணத்திலிருந்து கழிக்கப்படும். விலை குறைக்கப்பட்ட அரிசி விநியோகிக்கப்பட்டால் விலை குறைக்கப்பட்ட வீதத்தில் ஒப்பந்தக்காரர் பணம் செலுத்த வேண்டும். அந்த அரிசிக்கான கழிவு விலை குறைக்கப்பட்ட அரிசியின் விலைக்கும் குறைக்கப்படாத அரிசியின் விலைக்கும் உள்ள வித்தியாசத்தின்படிக்கு ஒப்பந்தகாரர்களின் உணவுப் பணத்திலிருந்து கழிக்கப்படும்.

(iii) வேலையாட்கள் அரிசிப்பங்கீட்டுப் புத்தகங்களைக் கொடுத்தாலொழிய அவர்களுக்குப் பாண் உணவு விநியோகிக்கப்படும். அப்புத்தகங்களைக் கொடுத்தால் விநியோகிக்கப்படாத பாணின் விலை ஒப்பந்தக்காரரின் பணத்திலிருந்து பின்வருமாறு அறவிடப்படும் :—

(அ) கூப்பனிலிருந்து பெறப்பட்ட அரிசி இன்று போன்று இனமாகவிருந்தால் விநியோகிக்கப்படாத பாணின் முழு விலையுங் கழிக்கப்படும்.

(ஆ) அந்தக் கூப்பன்களில் விலை குறைக்கப்பட்ட வீதத்தில் கொடுக்கப்படும் அரிசிக்கு ஒப்பந்தக்காரர் பணம் செலுத்தினால் விநியோகிக்கப்படாத பாணின் விலைக்கும் விலை குறைக்கப்பட்ட அரிசியின் விலைக்கும் உள்ள வித்தியாசத்தின்படிக்கு அறவிடப்படும்.

மு. வேதாரணியம்,
சௌக்கிய சேவை அத்தியட்சர்.

சௌ. சே. அ. அ. அனுராதபுரம்,
1973 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 20 ந உ.

### குறித்த அட்டவணை

| | கேள்விக் கட்டுப் பணம் | பிணை வைப்புப் பணம் | கேள்விகள் மூடப்படும் திகதியும் நேரமும் | உணவுகள் அண்ணளவான தொகைகள்: வேலைக்காரர்கள்: மீன் | மாட்டிறைச்சி | கருவாடு | முட்டை | காய்கறி | நோயாளிகள்: மீன் | மாட்டிறைச்சி | கருவாடு | முட்டை | காய்கறி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தாபனங்கள் | ரூ. | ரூ. | | | | | | | | | | | |
| 1. கொமரன்கடவலை வைத்தியசாலை .. | 100 | 600 | | 300 | — | 600 | 300 | 800 | 400 | — | 800 | 400 | 1,200 |
| 2. கொறவப்பொத்தானை வைத்தியசாலை | 100 | 600 | | 200 | — | 400 | 200 | 500 | 1,000 | — | 2,000 | 1,000 | 3,600 |
| 3. காட்டகஸ்திகிரிலியா வைத்தியசாலை .. | 100 | 800 | | 600 | — | 1,200 | 600 | 1,800 | 1,400 | — | 2,500 | 1,300 | 3,600 |
| 4. கலாவெவ வைத்தியசாலை .. | 100 | 600 | | 400 | 300 | 300 | 300 | 1,000 | 1,000 | 700 | 700 | 700 | 2,400 |
| 5. கெக்கிராவ வைத்தியசாலை .. | 100 | 800 | 2.11.1973 | 350 | — | 700 | 350 | 1,100 | 1,700 | — | 3,200 | 1,600 | 5,500 |
| 6. குச்சாவெளி வைத்தியசாலை .. | 100 | 600 | காலை | 300 | — | 600 | 300 | 900 | 450 | — | 800 | 400 | 1,300 |
| 7. மிகிந்தலை வைத்தியசாலை .. | 100 | 600 | 10.00 மணி | 300 | 300 | 300 | 300 | 800 | 1,700 | 1,500 | 1,700 | 1,100 | 4,800 |
| 8. மூதூர் வைத்தியசாலை .. | 100 | 600 | | 400 | — | 700 | 400 | 1,200 | 1,700 | — | 3,200 | 1,700 | 5,200 |
| 9. நெலுபாவ .. | 100 | 600 | | 300 | 300 | 300 | 300 | 900 | 600 | 500 | 550 | 550 | 1,700 |
| 10. நொச்சியாகம வைத்தியசாலை .. | 100 | 800 | | 300 | — | 600 | 300 | 900 | 1,400 | — | 2,800 | 1,400 | 2,800 |
| 11. பதவியா வைத்தியசாலை .. | 100 | 800 | | 900 | 800 | 800 | 800 | 2,500 | 2,000 | 2,000 | 2,000 | 2,100 | 6,000 |
| 12. பெரியகிண்ணியா வைத்தியசாலை .. | 100 | 800 | | 200 | — | 350 | 1,200 | 600 | 2,800 | — | 1,600 | 2,850 | 2,800 |
| 13. தம்பலகாமம் வைத்தியசாலை .. | 100 | 600 | | 350 | — | 700 | 350 | 1,000 | 900 | — | 1,800 | 1,100 | 2,500 |
| 14. தம்மன்னுவ வைத்தியசாலை .. | 100 | 600 | | 350 | — | 700 | 350 | 1,000 | 750 | — | 1,500 | 800 | 2,200 |
| 15. குஅளுவெவ வைத்தியசாலை .. | 100 | 600 | | 300 | 300 | 300 | 300 | 1,000 | 800 | 800 | 800 | 600 | 2,600 |
| 16. சேனபுர வைத்தியசாலை .. | 100 | 600 | | 250 | — | 450 | 250 | 700 | 600 | — | 1,300 | 600 | 1,800 |

10–12/1—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

---

### சௌக்கியத் திணைக்களம்—அனுராதபுரப் பிரிவு

பால் தவிர்ந்த சமைக்காத உணவு வழங்கல்

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவையும்.**—1974 ம் ஆண்டு சனவரி மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1974, திசெம்பர் மாதம் 31 ந் திகதி (இரு நாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் நிலையங்களுக்குப் பால் தவிர்ந்த உணவுப் பொருட்கள் வழங்குவதற்குரியதும் முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து சௌக்கிய சேவை அத்தியட்சகர், அனுராதபுரம் ஏற்றுக்கொள்வார்.

2. **கேள்விக் கட்டுப்பணம்.**—கீழ்க்காணும் அட்டவணையின் இரண்டாம் பந்தியில் குறிக்கப்படும் வைப்புப் பணத்தை எந்த ஒரு கச்சேரியில் எனது பெயரில், கட்டிப் பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ளவும்.

அனுமதிபெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்கள் அல்லாவிட்டால் பதிவுசெய்த கூட்டுறவுச் சங்கங்கள், பலநோக்குச் சங்கங்கள் கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பங்கள் செய்யலாம். மேலே குறிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விக் கட்டுப்பணம் கட்டவேண்டிய அவசியமில்லை. இச்சங்கங்கள் தங்கள் பதிவு இலக்கத்தை கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்போது எழுதி அனுப்ப வேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பம் செய்யுமுன் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் சௌக்கிய சேவை அத்தியட்சகர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும்.

மேலே இரண்டாம் பந்தியில் கூறப்பட்டுள்ள எந்த ஒரு காரியாலயத்திலும் இதற்கான பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகுதி விபரங்களையோ அல்லது நிதிநிலை நிரூபணத்தையோ அளிக்கத் தவறினால் கேள்விக் கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

4. **தொகைகள்.**—கீழ்க்காணும் அட்டவணையில் 5 ம் பந்தியில் உத்தேச விநியோகத் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பவேண்டிய முறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சௌக்கிய சேவை அத்தியட்சர், அனுராதபுரம் என்று முகவரியிடப்பட்ட உறையில் வைத்து அனுப்பப்பட வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடது பக்கத்து மேல் மூலையில் சேவையின் தன்மையும் இடது பக்கத்து கீழ் மூலையில் அனுப்புபவரின் பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளைப் பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம், அல்லது அவைகளை இந்தக் காரியாலயத்தில் இருக்கும் கேள்விப் பெட்டிக்குள் போடலாம். அல்லது ஒப்பந்த விநியோகக் கணக்காளரிடம் கொடுத்தால், அவர் அக்கேள்வியை ஒப்புக்கொண்டதற்கு ஒரு பற்றுச்சீட்டுத் தருவார்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ் அட்டவணையின் நாலாவது பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை பத்து மணிக்கு இந்தக் காரியாலயத்தில் கேள்விகள் மூடப்பெற்று உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமுகமாயிருக்கலாம். சமுகமாயிருக்கும் கேள்விக்காரர்களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும் தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுனித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனோ அல்லது என்னது அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனோ ஒழுங்குகள் செய்த பின்னர் தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுனித்தாய அனுமதிக்கப்படுவார்.

8. **கேள்விகள் பற்றித் தீர்மானித்தல்.**—கேள்விப்படிவங்களில் உள்ள சாப்பாட்டுப் "பீ" அட்டவணையிற் கொடுக்கப்பட்டிருக்கும் விடயங்களுக்குக் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி உண்டாகும் சேவையின் முழுச் செலவுத் தொகையை அடிப்படையாகக் கொண்டே பெறப்பட்ட கேள்விகள் தீர்மானிக்கப்படும்.

இருந்தும் கேள்விக்காரர்கள் கேள்விப்பத்திரத்தின் அட்டவணை "சீ" யில் உள்ள மேலதிகமான உணவுப் பொருட்களுக்கும் வீதங்களை குறிப்பிட வேண்டும். ஆனால் கேள்வியில் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி அல்லது சந்தை வீதப்படி இவைகளில் எது குறைந்ததோ அந்த வீதப்படியும் விலை கட்டுப்படுத்தப்பட்டிருந்தால் அந்த விலைப்படியே பணம் கொடுக்கப்படும்.

9. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்ட வீதத்தின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருப்பது போல் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரைக்கும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி எச்சூழ்நிலையையும் முன்னிட்டுக் குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் வீதங்கள் மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

10. **பிணை வைப்புப்பணங்கள்.**—இங்கு தரப்பட்டிருக்கும் அட்டவணையின் 3 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் தேவையான பிணைப்பணத்தைக் கட்டிய பின்பே தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும்.

11. **களஞ்சியத்திடுகை இடவசதி.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்களுக்கு தாபனத்திலோ அடுத்துள்ள இடங்களிலோ களஞ்சிய அறை போன்ற வசதிகள் கொடுக்கப்படமாட்டா.

12. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப்படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்க வேண்டும். கேள்விப்படிவத்திலுள்ள உடன்படிக்கை நிபந்தனைகளையும் கேள்விக்காரர்கள் கவனிக்க வேண்டும்.

13. (i) கேள்விக்காரர்களால் குறிப்பிடப்படும் வீதங்கள் ஒரு முழு உணவுச் சாப்பாட்டிற்கு 3½ அவுன்ஸ் அரிசி அளவு வீதம் இரு சாப்பாடுகள் ஒரு நோயாளிக்கு விநியோகிக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

(ii) உணவுக் கட்டுப்பாட்டதிகாரியினால் விலை குறைக்கப்படாத வீதத்தில் அரிசி விநியோகிக்கப்படும். கேள்விக்காரர்கள் அந்த அரிசிக்கு உணவுக் கட்டுப்பாட்டதிகாரியினால் அன்றன்று விதிக்கப்படும் விலைக்கு பணம் கொடுக்க வேண்டும். நன்கொடையாகவோ இனமாகவோ அளிக்கப்பட்ட அரிசி ஒப்பந்தகாரர்களுக்குச் சமையலுக்கு விநியோகிக்கப்பட்டால் விலை குறைக்கப்படாத வீதத்தில் அந்த அரிசியின் அளவு ஒப்பந்தகாரரின் உணவுப் பணத்திலிருந்து கழிக்கப்படும். விலை குறைக்கப்பட்ட அரிசி விநியோகிக்கப்பட்டால் விலை குறைக்கப்பட்ட வீதத்தில் ஒப்பந்தக்காரர் பணம் செலுத்த வேண்டும். அந்த அரிசிக்கான கழிவு விலை குறைக்கப்பட்ட அரிசியின் விலைக்கும் குறைக்கப்படாத அரிசியின் விலைக்கும் உள்ள வித்தியாசத்தின் படிக்கு ஒப்பந்தகாரர்களின் உணவுப் பணத்திலிருந்து கழிக்கப்படும்.

(iii) வேலையாட்கள் அரிசிப்பங்கீட்டுப் புத்தகங்களைக் கொடுத்தாலொழிய அவர்களுக்குப் பாண் உணவு விநியோகிக்கப்படும். அப்புத்தகங்களை கொடுத்தால் விநியோகிக்கப்படாத பாணின் விலை ஒப்பந்தகாரரின் பணத்திலிருந்து பின்வருமாறு அறவிடப்படும் :—

(அ) கூப்பனிலிருந்து பெறப்பட்ட அரிசி இன்றுபோன்று இனமாகவிருந்தால் விநியோகிக்கப்படாத பாணின் முழு விலையுங் கழிக்கப்படும்.

(ஆ) அந்தக் கூப்பன்களில் விலை குறைக்கப்பட்ட வீதத்தில் கொடுக்கப்படும் அரிசிக்கு ஒப்பந்தக்காரர் பணம் செலுத்தினால் விநியோகிக்கப்படாத பாணின் விலைக்கும் விலை குறைக்கப்பட்ட அரிசியின் விலைக்கும் உள்ள வித்தியாசத்தின்படிக்கு அறவிடப்படும்.

மு. வேதாரணியம்,
சௌக்கிய சேவை அத்தியட்சர்.

சௌ. சே. அ. அ. அனுராதபுரம்,
1973 ம் ஆம் செத்தெம்பர் மீ 20 ந் உ.

குறித்த அட்டவணை

| தாபனங்கள் | கேள்விக் கட்டுப் பணம் ரூபா | பிணை வைப்புப் பணம் ரூபா | கேள்விகள் மூடப்படும் திகதியும் நேரமும் | உணவுகள் அண்ணளவான தொகைகள் — வேலைக்காரர்கள்: மீன் | மாட்டி றைச்சி | கருவாடு | முட்டை | காய் கறி | நோயாளிகள்: மீன் | மாட்டி றைச்சி | கருவாடு | முட்டை | காய் கறி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மதவாச்சி வைத்தியசாலை .. | 100 | 800 | 2.11.1973 காலை 10 மணி | 700 | 650 | 700 | 650 | 2,200 | 2,000 | 1,100 | 1,900 | 1,900 | 7,000 |

10–12/2—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

## சௌக்கியத் திணைக்களம்—அநுராதபுரப் பிரிவு

பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்கல்

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவையும்.**—1974 ம் ஆண்டு சனவரி மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1974 திசெம்பர் மாதம் 31 ந் திகதி (இரு நாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் நிலையங்களுக்குப் பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்குவதற்குரியதும் முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து சௌக்கிய சேவை அத்தியட்சர், அநுராதபுரம் ஏற்றுக்கொள்வார்.

2. **கேள்விக் கட்டுப்பணம்.**—கீழ்க்காணும் அட்டவணையின் இரண்டாம் பந்தியில் குறிக்கப்படும் வைப்புப் பணத்தை எந்த ஒரு கச்சேரியில் எனது பெயரில் கட்டிப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளவும்.

அனுமதி பெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்கள் அல்லாவிட்டால் பதிவு செய்த கூட்டுறவுச் சங்கங்கள், பலநோக்குச் சங்கங்கள் கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பங்கள் செய்யலாம். மேலே குறிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விக் கட்டுப்பணம் கட்டவேண்டிய அவசியமில்லை. இச்சங்கங்கள் தங்கள் பதிவு இலக்கத்தைக் கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்போது எழுதி அனுப்பவேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பம் செய்யுமுன் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் சௌக்கிய சேவை அத்தியட்சகர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும்.

மேலே இரண்டாம் பந்தியில் கூறப்பட்டுள்ள எந்த ஒரு காரியாலயத்திலும் இதற்கான பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகுதி விபரங்களையோ அல்லது நிதி நிலை நிரூபணத்தையோ அளிக்கத் தவறினால் கேள்விக் கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

4. **தொகைகள்.**—கீழ்க்காணும் அட்டவணையில் 5 ம் பந்தியில் உத்தேச விநியோகத் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பவேண்டிய முறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சௌக்கிய சேவை அத்தியட்சர், அநுராதபுரம் என்று முகவரியிடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பப்பட வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடது பக்கத்து மேல் மூலையில் சேவையின் தன்மையும் இடது பக்கத்துக் கீழ் மூலையில் அனுப்புபவரின் பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளைப் பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம் அல்லது அவைகளை இந்தக் காரியாலயத்தில் இருக்கும் கேள்விப் பெட்டிக்குள் போடலாம் அல்லது ஒப்பந்த விநியோகக் கணக்காளரிடம் கொடுத்தால், அவர் அக்கேள்வியை ஒப்புக்கொண்டதற்கு ஒரு பற்றுச்சீட்டுத் தருவார்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ் அட்டவணையின் நாலாவது பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை பத்து மணிக்கு இந்தக் காரியாலயத்தில் கேள்விகள் மூடப்பெற்று உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமூகமாயிருக்கலாம். சமூகமாயிருக்கும் கேள்விக்காரர்களுக்குக் கேள்விக்காரர்களின் பெயர்களும், தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுனித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனே அல்லது எனது அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனே ஒழுங்குகள் செய்த பின்னர் தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுனித்தாய அனுமதிக்கப்படுவார்.

8. **கேள்விகள் பற்றித் தீர்மானித்தல்.**—கேள்விப்படிவங்களில் உள்ள சாப்பாட்டுப் " பீ " அட்டவணையிற் கொடுக்கப்பட்டிருக்கும் விடயங்களுக்குக் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி உண்டாகும் சேவையின் முழுச் செலவுத் தொகையை அடிப்படையாகக் கொண்டே பெறப்பட்ட கேள்விகள் தீர்மானிக்கப்படும்.

இருந்தும் கேள்விக்காரர்கள் கேள்விப்பத்திரத்தின் அட்டவணை " சீ " யில் உள்ள மேலதிகமான உணவுப் பொருட்களுக்கும் வீதங்களை குறிப்பிட வேண்டும். ஆனால் கேள்வியில் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி அல்லது சந்தை வீதப்படி இவைகளில் எது குறைந்ததோ அந்த வீதப்படியும் விலை கட்டுப்படுத்தப்பட்டிருந்தால் அந்த விலைப்படியே பணம் கொடுக்கப்படும்.

9. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்ட வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பதுபோல் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரைக்கும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி எச்சூழ்நிலையையும் முன்னிட்டுக் குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் வீதங்களை மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

10. **பிணை வைப்புப் பணங்கள்.**—இங்கு தரப்பட்டிருக்கும் அட்டவணையின் 3 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் தேவையான பிணைப் பணத்தைக் கட்டிய பின்பே தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும்.

11. **களஞ்சியத்திடுகை இடவசதி.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்களுக்குத் தாபனத்திலோ அடுத்துள்ள இடங்களிலோ களஞ்சிய அறை போன்ற வசதிகள் கொடுக்கப்படமாட்டா.

12. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப்படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளை படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்க வேண்டும். கேள்விப்படிவத்திலுள்ள உடன்படிக்கை நிபந்தனைகளையும் கேள்விக்காரர்கள் கவனிக்க வேண்டும்.

13. (i) கேள்விக்காரர்களால் குறிப்பிடப்படும் வீதங்கள் ஒரு முழு உணவுச் சாப்பாட்டிற்கு 3½ அவுன்ஸ் அரிசி அளவு வீதம் இரு சாப்பாடுகள் ஒரு நோயாளிக்கு விநியோகிக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

(ii) உணவுக் கட்டுப்பாட்டதிகாரியினால் விலை குறைக்கப்படாத வீதத்தில் அரிசி விநியோகிக்கப்படும். கேள்விக்காரர்கள் அந்த அரிசிக்கு உணவுக் கட்டுப்பாட்டதிகாரியினால் அன்றன்று விதிக்கப்படும் விலைக்குப் பணம் கொடுக்க வேண்டும். நன்கொடையாகவோ இனமாகவோ அளிக்கப்பட்ட அரிசி ஒப்பந்தகாரர்களுக்குச் சமையலுக்கு விநியோகிக்கப்பட்டால் விலை குறைக்கப்படாத வீதத்தில் அந்த அரிசியின் அளவு ஒப்பந்தக்காரரின் உணவுப் பணத்திலிருந்து கழிக்கப்படும்; விலை குறைக்கப்பட்ட அரிசி விநியோகிக்கப்பட்டால் விலை குறைக்கப்பட்ட வீதத்தில் ஒப்பந்தக்காரர் பணம் செலுத்த வேண்டும். அந்த அரிசிக்கான கழிவு விலை குறைக்கப்பட்ட அரிசியின் விலைக்கும் குறைக்கப்படாத அரிசியின் விலைக்கும் உள்ள வித்தியாசத்தின்படிக்கு ஒப்பந்தக்காரர்களின் உணவுப் பணத்திலிருந்து கழிக்கப்படும்.

(iii) வேலையாட்கள் அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்களைக் கொடுத்தாலொழிய அவர்களுக்குப் பாண் உணவு விநியோகிக்கப்படும். அப்புத்தகங்களைக் கொடுத்தால் விநியோகிக்கப்படாத பாணின் விலை ஒப்பந்தகாரரின் பணத்திலிருந்து பின்வருமாறு அறவிடப்படும் :—

(அ) கூப்பனிலிருந்து பெறப்பட்ட அரிசி இன்று போன்று இனமாகவிருந்தால் விநியோகிக்கப்படாத பாணின் முழு விலையும் கழிக்கப்படும்.

(ஆ) அந்தக் கூப்பன்களில் விலை குறைக்கப்பட்ட வீதத்தில் கொடுக்கப்படும் அரிசிக்கு ஒப்பந்தக்காரர் பணம் செலுத்தினால் விநியோகிக்கப்படாத பாணின் விலைக்கும் விலை குறைக்கப்பட்ட அரிசியின் விலைக்கும் உள்ள வித்தியாசத்தின்படிக்கு அறவிடப்படும்.

மு. வேதாரணியம்,
சௌக்கிய சேவை அத்தியட்சகர்.

சௌ. சே. அ. அ. அநுராதபுரம்,
1973 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 28 ந் உ.

குறித்த அட்டவணை

| தாபனங்கள் | கேள்விக் கட்டுப் பணம் ரூபா | பிணை வைப்புப் பணம் ரூபா | கேள்விகள் மூடப்படும் திகதியும் நேரமும் | உணவுகள் அண்ணளவான தொகைகள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | வேலைக்காரர்கள் | | | | நோயாளிகள் | | | |
| | | | | மீன் | கருவாடு | முட்டை | மரக்கறி | மீன் | கருவாடு | முட்டை | மரக்கறி |
| இளைப்பற்றுவா பி.வி. | 100 | 300 | | 150 | 300 | 150 | 400 | 100 | 200 | 100 | 300 |
| எப்பாவலை பி.வி. | 100 | 400 | | 250 | 500 | 250 | 750 | 900 | 1,500 | 900 | 2,500 |
| கலன்பிந்துனுவேவ பி.வி. | 100 | 400 | | 100 | 200 | 150 | 400 | 500 | 900 | 600 | 1,500 |
| கபறணை பி.வி. | 100 | 400 | | 100 | 200 | 100 | 300 | 200 | 100 | 200 | 600 |
| கெபெற்றிக்கொலாவ பி.வி. | 100 | 400 | | 150 | 250 | 150 | 350 | 200 | 300 | 150 | 400 |
| மரதன் கடவலை பி.வி. | 100 | 400 | | 200 | 400 | 200 | 600 | 350 | 750 | 350 | 1,000 |
| மகாவிலாச்சிய பி.வி. | 100 | 300 | 30.10.73 | 200 | 350 | 200 | 500 | 100 | 250 | 100 | 400 |
| மொறவெவ பி.வி. | 100 | 300 | காலை | 200 | 400 | 200 | 600 | 400 | 800 | 400 | 1,200 |
| நாகம்பகா பி.வி. | 100 | 400 | 10மணி | 200 | 300 | 150 | 400 | 200 | 400 | 200 | 600 |
| புல்மோட்டை பி.வி. | 100 | 300 | | 100 | 200 | 100 | 300 | 100 | 300 | 150 | 400 |
| றணருவ பி.வி. | 100 | 300 | | 200 | 400 | 200 | 600 | 100 | 200 | 100 | 350 |
| இரத்மல்காவேவ பி.வி. | 100 | 400 | | 300 | 300 | 200 | 500 | 200 | 200 | 150 | 400 |
| இராசாங்கனை பி.வி. | 100 | 300 | | 100 | 200 | 100 | 300 | 100 | 200 | 100 | 300 |
| தலாவை பி.வி. | 100 | 400 | | 400 | 450 | 200 | 700 | 500 | 1,000 | 500 | 1,400 |
| தமுத்தேகம பி.வி. | 100 | 300 | | 150 | 300 | 150 | 450 | 150 | 300 | 150 | 400 |

10–35—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

---

**சுகாதாரத் திணைக்களம்—மட்டக்களப்புப் பிரிவு**

பால் தவிர்ந்த சமைத்த, சமைக்காத உணவு வழங்கல்

**கேள்விக்குத் தேவையான ஆட்களும் சேவையும்.**—1974 ம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1974 டிசம்பர் மாதம் 31 ம் திகதி (இரு நாட்களும்உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் நிலையங்களுக்குப் பால் தவிர்ந்த சமைத்த, சமைக்காத உணவு வழங்குவதற்கு உரியதும் முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகள் இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து மட்டக்களப்புப் பிரிவு சுகாதார சேவை அத்தியட்சகர் ஏற்றுக்கொள்வார்.

2. (i) **கேள்விக் கட்டுப்பணம்.**—ரூபா 100 பெறுமதியான வைப்புப் பணத்தை எந்த ஒரு கச்சேரியிலாவது எனது பெயரில் கட்டிப் பற்றுச் சீட்டுப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

(ii) **கேள்விப்பத்திரங்கள்.**—கேள்விப்பத்திரங்கள் அனுராதபுரம், பதுளை, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தறை, மாத்தளை, புத்தளம், இரத்தினபுரி, வவுனியா ஆகிய இடங்களிலுள்ள சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகங்களிலும் எனது அலுவலகத்திலும் கேள்விகள் முடியும் தினத்திற்கு முதல் நாள் நண்பகல் 12 மணிக்கு முதல் கொடுக்கப்படும். உரிய பத்திரத்தில் அனுப்பப் படாத கேள்விகள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா. கேள்விப்பத்திரங்களுக்குரிய விண்ணப்பப் பத்திரங்களுடன் கேள்விக் கட்டுப்பணப் பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டு இருத்தல் வேண்டும்.

தொடர்புள்ள கேள்விக்காரர்கள் கேள்விப்பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களை நேரகாலத்தோடு பெற்று, அவற்றைக் கேள்விகள் முடிவடையும் காலத்துக்குள் சமர்ப்பிக்கவேண்டும்.

மேலே 2 ம் பந்தியில் கூறப்பட்டுள்ள எந்த ஒரு காரியாலயத்திலும் இதற்கான பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகுதி விபரங்களையோ அல்லது நிதி நிலை நிரூபணத்தையோ அளிக்கத் தவறினால் கேள்விக்கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பம் செய்யுமுன் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப்பத்திரத்திரங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் சுகாதார சேவை அத்தியட்சகருக்கோ தெரிவித்தல் வேண்டும்.

4. **தொகைகள்.**—கீழ்க்காணும் அட்டவணையில் 5 ம் பந்தியில் உத்தேச விநியோகத் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பப்படவேண்டிய முறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சுகாதார சேவை அத்தியட்சகர், மட்டக்களப்பு என்ற முகவரியிடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பப்பட வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடது பக்கத்து மேல் மூலையில் சேவையின் தன்மையையும், இடது பக்கக்கீழ் மூலையில் அனுப்புபவரின் பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருத்தல்வேண்டும்.

முத்திரை இடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளைப் பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம் அல்லது அவைகளை இந்தக் காரியாலயத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டிக்குள் போடலாம் அல்லது என்னிடமோ செயலாளர்/கணக்காளரிடமோ கொடுத்தால் அவர் அக்கேள்வியை ஒப்புக்கொண்டதற்கு ஒரு பற்றுச்சீட்டு தருவார்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ் அட்டவணையின் 4 வது பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை 10.00 மணிக்கு இந்தக் காரி யாலயத்தில் கேள்விகள் மூடப்பெற்று உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமுகமாயிருக்கலாம். சமுகமாயிருக்கும் கேள்விக்காரர் களுக்குக் கேள்விக்காரர்களின் பெயர்களும் தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுனித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக் காரரும் என்னுடனோ அல்லது எனது அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனோ ஒழுங்குகள் செய்த பின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வி யின் இணைப்படியையும் நுனித்தாய அனுமதிக்கப்படுவார்.

8. **கேள்விகள் பற்றித் தீர்மானித்தல்.**—கேள்விப் படிவங்களிலுள்ள சாப்பாட்டுப் "பீ" அட்டவணையிற் கொடுக்கப்பட்டிருக்கும் விடயங் களுக்குக் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி உண்டாகும் சேவையின் முழுச் செலவுத் தொகையை அடிப்படையாகக் கொண்டே பெறப்பட்டுள்ள கேள்விகள் தீர்மானிக்கப்படும்.

இருந்தும் கேள்விக்காரர் கேள்விப்பத்திரத்தின் அட்டவணை "சீ" யில் உள்ள மேலதிகமான உணவுப் பொருட்களுக்கும் வீதங்களைக் குறிப்பிட வேண்டும். ஆனால் கேள்வியில் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி அல்லது சந்தை வீதப்படி இவைகளில் எது குறைந்ததோ அந்த வீதப் படியும் விலை கட்டுப்படுத்தப்பட்டிருந்தால் அந்த விலைப்படியே பணம் கொடுக்கப்படும்.

9. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்ட வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பதுபோல ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரைக்கும் வீதங்கள் மாற்றி அமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

10. **பிணைவைப்புப் பணங்கள்.**—இங்கு தரப்பட்டிருக்கும் அட்டவணையில் 3 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் தேவையான பிணைப் பணத்தைக் கட்டிய பின்பே தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்திற் கைச்சாத்திடவேண்டும்.

11. **களஞ்சியத்திடுகை இடவசதி.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்களுக்குத் தாபனத்திலோ அடுத்துள்ள இடங்களிலோ களஞ்சிய அறை போன்ற வசதிகள் கொடுக்கப்படமாட்டாது.

12. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப்படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்க வேண்டும். கேள்விப் படிவத்திலுள்ள உடன்படிக்கை நிபந்தனைகளையும் கேள்விக் காரர்கள் கவனிக்க வேண்டும்.

13. (i) **கேள்விக்காரர்களுக்கு அறிவித்தல்.**—கேள்விக்காரர்களால் குறிப்பிடப்படும் வீதங்கள் ஒரு முழு உணவுச் சாப்பாட்டிற்கு 3½ அவுன்சு அரிசி அளவு வீதம் இரு சாப்பாடுகள் ஒரு நோயாளிக்கு விநியோகிக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

(ii) குறைக்கப்படாத வீதத்தில் உணவுக் கட்டுப்பாட்டதிகாரியினால் அரிசி விநியோகிக்கப்படும். கேள்விக்காரர்கள் அந்த அரிசிக்கு உணவுக் கட்டுப்பாட்டதிகாரியினால் அவ்வப்போது அறிவிக்கப்படும் விலையின்படி பணம் கொடுத்தல் வேண்டும். நன்கொடையாகவோ, இனமாகவோ அளிக்கப் பட்ட அரிசி ஒப்பந்தக்காரர்களுக்குச் சமையலுக்கு விநியோகிக்கப்பட்டால் விலை குறைக்கப்படாத வீதத்தில் அந்த அரிசியின் அளவு ஒப்பந்தக்காரரின் உணவுப் பணத்திலிருந்து கழிக்கப்படும். விலை குறைக்கப்பட்ட அரிசி விநியோகிக்கப்பட்டால் விலை குறைக்கப்பட்ட வீதத்தில் ஒப்பந்தகாரர்கள் பணம் செலுத்துதல் வேண்டும். அந்த அரிசிக்கான கழிவு விலை குறைக்கப்பட்ட அரிசியின் விலைக்கும் விலை குறைக்கப்படாத அரிசியின் விலைக்குமுள்ள வித்தியாசத்தின்படி ஒப்பந்தக்காரர்களின் உணவுப் பணத்திலிருந்து கழிக்கப்படும்.

(iii) வேலையாட்கள் அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்களைக் கொடுத்தாலொழிய அவர்களுக்குப் பாண் உணவு விநியோகிக்கப்படும். அப்புத்தகங்களைக் கொடுத்தால் விநியோகிக்கப்படாத பாணின் விலை ஒப்பந்தக்காரரின் பணத்திலிருந்து பின்வருமாறு அறவிடப்படும் :—

(அ) கூப்பனிலிருந்து பெறப்பட்ட அரிசி இன்று போன்று இனமாகவிருந்தால் விநியோகிக்கப்படாத பாணின் முழு விலையும் கழிக்கப்படும்.

(ஆ) அந்தக் கூப்பன்களின் விலை குறைக்கப்பட்ட வீதத்தில் கொடுக்கப்படும் அரிசிக்கு ஒப்பந்தக்காரர் பணம் செலுத்தினால் விநியோகிக்கப் படாத பாணின் விலைக்கும் விலை குறைக்கப்பட்ட அரிசியின் விலைக்கும் உள்ள வித்தியாசத்தின்படிக்கு அறவிடப்படும்.

சுகசேவை அத்தியட்சர் அலுவலகம்,
மட்டக்களப்பு,
1973 ம் ஆண்டு செப்டம்பர் மீ 19 ந் உ.

வை. சிங்கநாயகம்,
சுகசேவை அத்தியட்சகர்,
மட்டக்களப்பு மாவட்டம்.

**மேல் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை**

| (1) | (2) | (3) | (4) | (5) அண்ணளவான உணவுகளின் அளவு | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ஊழியர்கட்கு | | | | நோயாளிகட்கு | | | |
| நிலையம் | கேள்வி வைப்புப் பணம் ரூபா | பிணை வைப்புப் பணம் ரூபா | கேள்விகள் மூடப் படும் திகதி | மீன் | கருவாடு | முட்டை | மரக்கறி | மீன் | கருவாடு | முட்டை | மரக்கறி |
| **சமைத்த உணவு** | | | | | | | | | | | |
| வாழைச்சேனை வைத்தியசாலை .. | 100 | 800 | | 429 | 864 | 408 | 1,299 | 1,236 | 2,361 | 1,158 | 3,683 |
| நாவற்காடு பிரசவவிடுதி .. | 100 | 300 | | 247 | 506 | 255 | 756 | 140 | 284 | 134 | 414 |
| செங்கலடி வைத்தியசாலை .. | 100 | 800 | | 232 | 450 | 216 | 713 | 463 | 936 | 473 | 1,297 |
| லகுகல பிரசவவிடுதி .. | 100 | 300 | | 305 | 616 | 253 | 1,014 | 250 | 578 | 266 | 928 |
| எருவூர் வைத்தியசாலை .. | 100 | 600 | | 282 | 546 | 273 | 831 | 833 | 1,603 | 788 | 2,497 |
| அக்கரைப்பற்று பிரசவவிடுதி .. | 100 | 300 | | 180 | 361 | 183 | 551 | 163 | 335 | 172 | 518 |
| அக்கரைப்பற்று வைத்தியசாலை .. | 100 | 600 | | 431 | 810 | 423 | 1,656 | 651 | 1,326 | 633 | 1,947 |
| பொத்துவில் வைத்தியசாலை .. | 100 | 400 | | 771 | 630 | 493 | 1,247 | 977 | 786 | 624 | 1,776 |
| நிந்தவூர் வைத்தியசாலை .. | 100 | 300 | 6.11.73 | 473 | 952 | 471 | 1,464 | 429 | 869 | 418 | 1,345 |
| மத்தியமுகாம் வைத்தியசாலை .. | 100 | 600 | மு.ப. | 355 | 739 | 299 | 1,193 | 533 | 1,080 | 422 | 1,729 |
| களுவாஞ்சிக்குடி வைத்தியசாலை .. | 100 | 400 | 10 மணி | 300 | 624 | 250 | 996 | 817 | 1,708 | 475 | 2,797 |
| திருக்கோவில் பிரசவவிடுதி .. | 100 | 300 | | 298 | 557 | 297 | 866 | 98 | 205 | 108 | 306 |
| காத்தான்குடி வைத்தியசாலை .. | 100 | 400 | | 197 | 375 | 187 | 562 | 770 | 1,731 | 893 | 2,704 |
| வாகரை வைத்தியசாலை .. | 100 | 500 | | 331 | 579 | 341 | 1,183 | 209 | 376 | 248 | 814 |
| சம்மாந்துறை வைத்தியசாலை .. | 100 | 600 | | 300 | 617 | 305 | 918 | 540 | 1,091 | 601 | 1,647 |
| மண்டபத்தடி வைத்தியசாலை .. | 100 | 300 | | 224 | 448 | 224 | 672 | 336 | 672 | 336 | 1,008 |
| **சமைக்காத உணவு** | | | | | | | | | | | |
| இங்கினியாகல வைத்தியசாலை .. | 100 | 800 | | 299 | 591 | 290 | 857 | 1,019 | 2,004 | 997 | 2,918 |

10–17—05,10,73 ம் திகதிய வர்த்தமானி இல. 80

### இலங்கைப் போக்குவரத்துச் சபை

கொழும்பு 5, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், பின்வரும் இனங்களை வினியோகிப்பதற்காக ஒவ்வொரு இனத்துக்கும் எதிராகக் குறிக்கப்பட்ட முடிவுத் தேதிகளில் மு.ப. 10.00 மணிவரை, பொறியிட்ட கேள்விப்பத்திரங்களை ஏற்றுக் கொள்ளுவார்.

| இனம் | முடிவுத் தேதி |
|---|---|
| (1) மரம் | 1973.10.31 |
| (2) "ரீபோல்" அல்லது அதையொத்த வேறு பொருள் | 1973.10.31 |
| (3) நீராளமான சவர்க்காரம் | 1973.10.31 |

மேற்குறித்த முடிவுத் தேதிக்கு முந்திய நாள்களில் நண்பகல் 12.00 மணி வரை எனது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் கேள்விகள் இரட்டைப் பிரதிகளில் செய்யப்பட வேண்டும். மரத்திற்கான கேள்விப்பத்திரங்களின் பொருட்டு ஒவ்வொரு தொகுதிக் கேள்விப்பத்திரத்துக்கும் மீளளிக்கப்படமாட்டாத கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக 25/- ரூபாயும் ரீபோல், நீராளமான சவர்க்காரம் ஆகியவற்றிற்கான கேள்விப்பத்திரங்களின் பொருட்டு ஒவ்வொரு தொகுதிக் கேள்விப்பத்திரத்துக்கு 10 ரூபாவும் கொடுப்பனவு செய்யப்படவேண்டும். ஒவ்வொரு கேள்விப்பத்திரத்தின் பொருட்டும் கேள்விப்பத்திரக் கட்டுப்பணம் 100/- ரூபாவை பொரலஸ்கமுவை, வெரகெரையிலுள்ள இ.போ.ச. பிரதிப் பிரதம கணக்காள உத்தியோகத்தரிடம் காசாகக் கட்டி அவ்விதம் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டை கேள்விப் படிவங்கள் வழங்கப்படுவதற்காக எனது அலுவலகத்தில் காட்டவேண்டும்.

மேலதிக விவரங்களை எனது அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வினியோகப் பகுதி,
வெரகெரை,

பிரதம வினியோக உத்தியோகத்தர்.

பொரல்லஸ்கமுவை, 73.09.19.

10-69—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

---

### நெல்சந்தைப்படுத்தல் சபை—அரிசிஆலை, நாஞட்டான்

நெல் உலரவைக்கும் சீமேந்துத் தரை விஸ்தரிப்பதற்கான கேள்வி

மேற்கூறப்பட்ட வேலைக்கு பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து கிளிநொச்சி நெல்சந்தைப்படுத்தல் சபை, பிரதேச அதிகாரியினல் கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்வி விண்ணப்பப்பத்திரங்களை திருப்பி எடுக்க முடியாத வைப்புப்பணம் ரூபா பத்து செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.

கேள்வி முடிவு திகதி : 22.10.1973.

க. சபாரத்தினம்,
பிர்தேச அதிகாரி, வடபிராந்தியம்,
நெல்சந்தைப்படுத்தல் சபை, கிளிநொசசி.

10-57—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

---

### நீர்ப்பாசனத் திணைக்களம்

பின்வரும் வேலைகளுக்கான வெவ்வேறன கேள்விப் பத்திரங்கள் கொழும்பு 7, பௌத்தலோக மாவத்தையிலுள்ள நீர்ப்பாசனத் திணைக்கள கேள்விச் சபைத் தலைவரால் 1973 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

#### காடுவெட்டுதல்—வாகல்கடை வெவ திட்டம்

1. முழுநிலம் அ—382.0 ஏக்கர்
2. டிை ஆ—447.0 ஏக்கர்
3. டிை இ—311.0 ஏக்கர்
4. டிை ஈ—403.0 ஏக்கர்
5. டிை உ—282.0 ஏக்கர்
6. டிை ஊ—269.0 ஏக்கர்
7. டிை எ—287.0 ஏக்கர்

2. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் ரூ. 1,00,000/- இற்கும் அதற்கு மேலாகவும் பதிவு செய்து கொண்டவர்களும் வேலையை வெற்றிகரமாகவும் விரைவாகவும் நிறைவேற்றுவதற்கு இன்றியமையாத பொறித் தொகுதிகளையும் இயந்திர சாதனங்களையுடையவர்களான ஒப்பந்தக்காரர்களுக்கு மாத்திரமே கேள்விப் படிவங்கள் வழங்கப்படும். இரண்டு அல்லது அதற்கு குறைந்ததான கேள்விகளுக்கு குறைந்த பட்சம் தேவைப்படும் பொறித் தொகுதிகளாக 150 பரிவலுக்குக் கூடிய குறைந்தது இரு ஊர்ந்து இழு பொறிகளும் 60 பரிவலுக்குக் குறையாத இரு ஊர்ந்து இழுபொறிகளும் இருத்தல் வேண்டும். பொறிகள் திறமையாக இயங்கும் நிலையிலும் இறக்குமதித் திகதியிலிருந்து பத்து வருடங்களுக்கு மேற்படாத சேவைக்காலத்தைக் கொண்டவையாகவும் இருத்தல் வேண்டும். கேள்விதாரர்கள் தங்கள் பொறிகளது தொடர் எண்கள், இறக்குமதித் திகதிகள் உட்பட முழு விபரங்களையும் கொடுத்து ஒப்பந்தம் செய்யுமுன் அப் பொறிகளைப் பார்வைக்குக் காட்டும் நிலையிலும் இருத்தல் வேண்டும்.

3. கொழும்பு 7, பௌத்தலோக மாவத்தையிலுள்ள நீர்ப்பாசனப் பணிப்பாளரின் அலுவலகத்திலிருந்தோ அல்லது பதவியாவிலுள்ள வாகல்கடை வெவத் திட்டத்தின் கட்டுமானப் பொறியியலாளரின் அலுவலகத்திலிருந்தோ பெறக் கூடியதாகவுள்ள படிவங்களில் கேள்விகள் தயாரிக்கப்பட்டு இணைப்படிவங்களில் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. கொழும்பு 7 ல் உள்ள நீர்ப்பாசனப் பணிப்பாளரின் அலுவலகத்திலோ அல்லது வாகல்கடை வெவத் திட்டத்தின் கட்டுமானப் பொறியியலாளரின் அலுவலகத்திலோ அல்லது ஏதேனுமொரு கச்சேரியிலோ கேள்வி ஒவ்வொன்றிற்கும் கேள்விக் கட்டுப் பணமாக ரூபா 250 செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டைக் காண்பிக்குமிடத்து கேள்விப் படிவங்கள் வழங்கப்படும். 1973 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 19 ம் திகதியன்று பிற்பகல் 2.30 மணிவரை அலுவலக நேரங்களில் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

5. கேள்விப் பத்திரங்கள் உள்ளடங்கியிருக்கும் உறைகள் பொறியிடப்பட்டு உறையின் மேல் "வாகல்கடைத் திட்டத்தில் காடு வெட்டுதல் வேலைக்கான கேள்விகள்" எனக் குறிப்பிட்டு 1973 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 23 ம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியதாக கொழும்பு 7, பௌத்தலோக மாவத்தையிலுள்ள நீர்ப்பாசனத் திணைக்களக் கேள்விச் சபைத் தலைவருக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். அல்லது திணைக்களச் செயலகத்தின் 3 ம் மாடியின் 10 ஆம் இலக்க அறையிலுள்ள திணைக்களக் கேள்விப் பத்திரப் பெட்டிக்குள் செலுத்தப்படல் வேண்டும்.

6. மேலதிக விபரங்களை கொழும்பு 7, பௌத்தலோக மாவத்தையிலிருக்கும் நீர்ப்பாசனப் பணிப்பாளரின் அலுவலகத்திலிருக்கும் பிரதிப் பணிப்பாளர் (கட்டுமானம்) அவர்களிடமிருந்தோ அல்லது பதவியா வாகல்கடைத் திட்டத்தில் நீர்ப்பாசன அலுவலகத்திலுள்ள கட்டுமானப் பொறியியலாளரிடம் இருந்தோ பெற்றுக் கொள்ளலாம்.

கே. கதிர்காமன்,
நீர்ப்பாசனப் பணிப்பாளருக்காக.

நீர்ப்பாசனத் திணைக்களம்,
கொழும்பு 7,
1973 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28 ம் திகதி.

10-215—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

**மட்டக்களப்பு மாவட்டத்தில் 20.10.73 தொடக்கம் 31.12.73 வரை, திமிலதீவு துறை இடைக்கால இறைவரி விற்பனவு**

*1973 ம் ஆண்டு (ஐப்பசி) ஒக்டோபர் மாதம் 20 ந் திகதியிலிருந்து 1973 ம் ஆண்டு மார்கழி மாதம் 31 ந் திகதிவரையிலுள்ள கால எல்லைக்குள் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கீழ்க்குறிப்பிடும் துறையில் வரிகள் பெறுவதற்கு சகல உரிமைகளேயும் வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள் துறைவரி விற்பனவுக்குரிய நிபந்தனைகட்கு உட்பட இத்தால் கோரப்படுகின்றன.*

2. ஒவ்வொரு கேள்விப்பத்திரங்கள் சார்பாகவும் எக்கச்சேரியிலாவது ரூபா 25 பிணையாகக் கட்டப்பட்டு அதற்கான பற்றுச்சீட்டு கேள்விப்பத்திரத்துடன் அணைக்கப்பட வேண்டும்.

மட்டக்களப்புக் கச்சேரியில் 1973 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15 ந் திகதி காலை 9.00 மணிவரை ஏற்கப்படும்.

3. மட்டக்களப்பு மாவட்டத்தில் "..........................(இங்கே துறையின் பெயர் எழுதவும்) "துறைவிற்பனவு" என்று இடது பக்கமேல் மூலையில் எழுதப்பட்டு முத்திரை இடப்பட்ட தபால் உறைகளிலேயே ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் கிடைப்பதற்கான கடைசி நேரத்திற்கு முன்னதாக அனுப்பப்படல் வேண்டும்.

4. 1973 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19 ந் திகதி மு. ப. 10.00 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிப்பவர்கள் யாராவது அவ்வேளையில் இக்கச்சேரியில் சமூகம் கொடுக்கவேண்டும். கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் வேளையில், கேட்டு விண்ணப்பிக்கும் கொந்தருத்தை திருப்திகரமாகக் கொண்டு நடத்தும் பொருளாதாரத் தகைமையுடையவர்கள் என்பதை உறுதிப்படுத்தும் தமது பிரிவுக்குரிய அரசாங்க அதிபரினுலோ, பிரிவுக் காரியாதிகாரியினுலோ கொடுக்கப்பட்ட அத்தாட்சிப் பத்திரம் ஒன்றை சமர்ப்பிக்கவேண்டும். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தமது பகுதிக்குரிய உதவிக் கூட்டுறவு ஆணையாளரிடம் இருந்து தமது சங்கம் துறையை நடத்தி ஆயவரி அறவிடத் தகுதியுள்ளதெனவும் கேள்விப்பணத்தில் மூன்று ஒரு பங்கு பிணைப்பணமாகக் கட்டக்கூடிய நிதிவசதியுடையது என்றும் ஓர் அத்தாட்சிப் பத்திரத்தைக் கேள்விப் பத்திரத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

5. 40 குதிரைப் பவர் அல்லது 12½ குதிரைப்பவர் மோட்டார் இயந்திரம் தருவதற்கு மேலும் ஆதனப்பிணைகள் முறையே ரூபா 6,000 க்கும் ரூபா 2,500 க்கும் துறைக் குத்தகை எடுப்பவர் அரசாங்க அதிபருக்குக் கொடுத்து அதனைப் பாதுகாப்பான இடத்தில் வைத்திருக்கவேண்டும்.

6. தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்தக்காரர் விற்பனவு நிபந்தனைகட்கு இணங்கவோ, பிணைகட்டுவதற்கோ, பிணை உறுதிக்குத் தொகையைக் கட்டுவதற்கோ தவறுமிடத்து, அவரினுல் கொடுக்கப்பட்ட கேள்விப்பத்திரக் கட்டணத்தை அவர் இழந்தவராவர். அத்துடன் அவர் அரசாங்கத்தின்கீழ் எவ்வித கொந்தருத்து வேலைகள் செய்வதிலிருந்தும் தடுக்கப்படுவர். இவ்விதிவிலக்கைத் தவிர வேறு தேர்ந்தெடுக்கப்பட்ட கொந்தருத்துக்காரரினுல் அல்லது கொந்தருத்துக்காரர்களினுல் விற்பனை நிபந்தனைகள் கையொப்பமிடப்பட்டு பிணையும் கொடுக்கப்பட்டபின் மற்றையோரின் கேள்விப்பத்திரத்தில் பணம் மீட்டுக்கொடுக்கப்படும்.

7. எவ்வித காரணமும் காட்டாது, எக்கேள்விப்பத்திரத்தையும் அல்லது எல்லாக் கேள்விப் பத்திரங்களேயும் ஏற்றுக்கொள்ளாதிருப்பதற்கான தனியுரிமை அரசாங்க அதிபருக்கே உரித்தாகும்.

8. தற்போது பாதைகள் வேலை செய்யும் துறைக்குப் பாதை கொடுக்கப்படும். வள்ளங்கள் கிடைக்குமாயின் வள்ளங்கள் கொடுக்கப்படும். அவ்வாறு வள்ளங்கள் கிடைக்காவிடில் தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்தக்காரர் சேவை திருப்திகரமாக நடைபெறுவதற்காகத் தம்முடைய சொந்த வள்ளங்களேயே உபயோகிக்க வேண்டும்.

(அ) அரசாங்கத்தால், வள்ளங்கள், பாதைகள், இயந்திர மோட்டார்கள், துறைக்குத்தகை எடுப்பவர்கட்கு கொடுக்குமிடத்து அவைகளே மிகவும் பாதுகாப்பாகவும், மழை, வெயில் ஆதியவற்ருல் பாதிக்கப்படாமலும், பழுதடையாமலும், களவு போகாமலும் மிகவும் கவனமாகப் பாதுகாப்பான இடத்தில் வைத்திருத்தல் வேண்டும். தவறின் அவைகட்குரிய நட்டத்தை துறைக்குத்தகை எடுப்பவர்களிடமிருந்து அறவிடப்படும்.

9. துறைவரி விதிகளின்படி தபால் கொண்டுசெல்லும் சேவகர்களும், அரசாங்க வாகனங்களும் துறைக்கூலி செலுத்த வேண்டியதில்லை. தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்தகாரர் தபால் சேவகரிடமிருந்தும் அரசாங்க வாகனங்களிடமிருந்தும் துறைக் கூலி ஏற்கக் கூடாது.

10. மட்டக்களப்பு கச்சேரிக்கு விண்ணப்பிக்குமிடத்து மேலதிக விபரங்களேத் தெரிந்து கொள்ளலாம்.

பூ. சங்காரவேல்,
மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்.

கச்சேரி,
மட்டக்களப்பு,
22.9. 73.

10–56—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

**அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்**

**01.12.1968 தொடங்கி அமுலுக்கு வந்தது**

# இலங்கைக் குடியரசு வர்த்தமானி

## வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. சனிக்கிழமைகளில் மு. ப. 8.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரையும், மற்றும் நாட்களில் மு. ப. 8.00 மணி முதல் பி. ப. 3.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. சனிக்கிழமைகளில் மு. ப. 11.00 மணிக்கும், மற்றும்நாட்களில் பி. ப. 2.00 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்றல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக ரைப் அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் "சுப்பிறீம் கோட் புறொக்ரறுல்" கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 01 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | | ரூ. | ச. |
|---|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. | .. | 20 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி | .. | 20 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. | .. | 220 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | .. | 440 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைக் குடியரசு வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 01 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் 01.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| இலங்கைக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் | | வெளியூர் | |
|---|---|---|---|---|
| | ரூ. | ச. | ரூ. | ச. |
| ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 46 | 0 | 60 | 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. .. .. | 36 | 0 | 42 | 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் .. .. | 43 | 50 | 51 | 50 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

**தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | ரூ. | ச. | தபாற் செலவு (உள்ளூர்) ரூ. ச. |
|---|---|---|---|
| (அ) (i) வர்த்தமானியில் இடம்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. .. | 0 | 50 | 20 |
| (ii) வர்த்தமானியில் இடம்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. .. | 1 | 0 | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடம்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 30 | 15 |
| (ii) வர்த்தமானியில் இடம்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 6[illegible] | 15 |

இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி இல. 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

முக்கிய கவனிப்பு.—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஒற்றோபர் | .. | 5.10.73 | வெள்ளி | .. | 25. 9.73 | செவ்வாய் | .. | ந.ப. 12.00 |
| | | 12.10.73 | வெள்ளி | .. | 3.10.72 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 19.10.73 | வெள்ளி | .. | 10.10.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 26.10.73 | வெள்ளி | .. | 17.10.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| நவெம்பர் | .. | 2.11 73 | வெள்ளி | .. | 24.10.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 9.11.73 | வெள்ளி | .. | 31.10.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 16.11.73 | வெள்ளி | .. | 7.11.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 23.11.73 | வெள்ளி | .. | 14.11.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 30.11.73 | வெள்ளி | .. | 21.11.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| திசெம்பர் | .. | 7.12.73 | வெள்ளி | .. | 28.11.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 14.12.73 | வெள்ளி | .. | 5.12.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 21.12.73 | வெள்ளி | .. | 12.12.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 28.12.73 | வெள்ளி | .. | 19.12.73 | புதன் | .. | ந.ப. 12.00 |

எல். டபிள்யு. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் வ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.